**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 14/2020**
**நாள் 20/12/2023, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - குமாரி | க/பெயர் - செங்கன் |
| வயது - 55 | தொழில் - |
| விலாசம் - சின்னநத்தம் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை-**

நான் என்ன படித்துள்ளேன் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலம் நான் படித்து பார்த்து கையொப்பம் போட்டேனா என்றால் ஆமாம். மைத்துனர் அப்பாவின் மகன் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் தனது அப்பா வழி சொத்தின் பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் அவர் சொத்துக்களை விற்று சென்றுவிட்டார். விற்பனை செய்து சென்றதற்கு ஆதாரமாக நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை சரி தான். பாகப்பிரினை வாய்மொழியாக பிரித்து கொண்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வயது 55 ஆகிறது. எனக்கு எந்த வருடத்தில் திருமணம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. வாய்மொழியாக பாகம் பிரித்தது எந்த மாதம் எந்த வருடம் என்றால் ஞாபகம் இல்லை. எனது மச்சினருக்கு எந்த வருடம் உடல் நிலை சரியில்லாமல் போனது என்றால் அப்போது அவர் சிறிய குழந்தை. அவருக்கு என்ன நோய் என்று எனக்கு தெரியாது. மாமனார் வழி சொத்தில் எனக்கு வீட்டு

மனையும் உள்ளது விவசாய நிலங்களும் உள்ளது. விவசாய நில சொத்துக்களை எனது மச்சினர் எந்த வருடத்தில் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**